# பெலி அத்த பிரதேச சபை
# அம்பாந்தோட்டை மாவட்டம்

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2012 மார்ச் 28 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2011 ஏப்ரல் 28 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2012 ஜுலை 05 ஆந் திகதியன்று சபையின் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரீசீலனைகளிருந்து தென்படுவதும் எனக்குச் சமர்ப்பிக்கப்பட்ட அதி உயர் தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய பெலி அத்த பிரதேச சபையின் 2011 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் பொருட்டு முறையான கணக்கீட்டு அறிக்கைகள் பேணப்பட்டுள்ளன என்றும் தலைவருக்குச் சமர்ப்பிக்கப்பட்ட எனது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிசார் கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களைத்தவிர, 2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான பெலி அத்த பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்பான நிலைமை மற்றும் அத் தினத்தில் முடிவுற்ற அதன் செயற்பாட்டு நடவடிக்கைகளது நிதிசார் விளைவுகளும் காசுப்பாய்ச்சலும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தென்படும் விதத்தில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கிசைய நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளனவென்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) உள்ளூராட்சி உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் கீழ் கட்டிட நிர்மாண வேலைக்குப் பெறப்பட்ட தொகையில் உள்ளடங்கிய கடன் 2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 11,674,752 ஆகும். எனினும், அது நிதிசார் கூற்றுக்களில் ரூபா 5,075,979 அதிகரித்தவாறு ரூபா 16,750,731 ஆகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மூலதன உதவியின் கீழ் உள்ளூராட்சி உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் திட்டங்களினூடாக நூலகக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்குப் பெறப்பட்ட மூலதன உதவி ரூபா 35,531,854 ஆகும். அது ரூபா 14,259,818 குறைவாக வருமான செலவினக் கணக்கில் ரூபா 21,272,036 ஆகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) சபை திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்த தொகை ரூபா 1,000,000 ஆகும். இதன் வட்டியும் மீண்டும் முதலீடு செய்யப்படுவதுடன் 2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அம் முதலீடுகளின் பெறமதி ரூபா 1,434,556 ஆகவிருந்தது. எனினும், முதலீடுகளின் பெறுமதி ரூபா 434,556 குறைவாக ரூபா 1,000,000 ஆக நிதிசார் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றின்மை

#### (அ) பதில் கிடைக்கப்பெறாத கணக்காய்வு ஐய வினாக்கள்

2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒரு கணக்காய்வு ஐய வினாவிற்குப் பதில் சமர்ப்பிக்கப்படாதிருந்தது. அந்த ஐய வினாவிற்குரிய கணிப்பிடப்படக்கூடிய பெறுமதி 1,107,806 ஆகும்.

#### (ஆ) தகவல்களைக் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்காமை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 16,871,383 கூட்டுத்தொகையுடைய கொடுக்கல் வாங்கல்களைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

## 2. நிதி, மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமாப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், 2011 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 2,719,321 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 4,838,403 ஆகும்.

## 2.2 வருவாய் நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன

தலைவரால் மீளாய்வாண்டின் பொருட்டுச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| | வருவாய் விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 |
| (i) | தீர்வையும் வரியும் | 2,244 | 2,802 | 1,263 |
| (ii) | குத்தகை வாடகை | 7,887 | 7,462 | 2,229 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 275 | 437 | - |
| (iv) | பிற வருவாய் | 24,666 | 21,553 | 6,691 |

### 2.2.2 முத்திரைக் கட்டணம்

2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பதிவாளர் நாயகத்திடமிருந்து முத்திரைக் கட்டணமாக ரூபா 5,986,922 பெறப்பட வேண்டியிருந்தது.

### 2.2.3 தீர்வையும் வரியும்

2011 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் உள்ள தீர்வையும் வரியுமாகிய ரூபா 1,248,449 அறவிடப்படுவதற்கு 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 158(1) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 2.2.4 கடை வாடகை

(அ) சபைக்குரிய கடைகளிலிருந்து 2008 செப்டெம்பர் 30 முதல் 2011 டிசெம்பர் 31 வரை நிலுவையாக இருந்த கடை வாடகை ரூபா 933,817 ஆகும். இதனை

அறவிடுவதற்கு 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 159 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) பெலி அத்த பஸ் தரிப்பிடத்தின் புதிய வர்த்தக பல்கூட்டுத்தொகுதியில் உள்ள கடைகளிலிருந்து 2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒரே தடவையில் சபையால் அறவிடப்பட வேண்டிய ரூபா 8,356,792 அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**2.2.5 ஏக்கர் வரி**

2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாக இருந்த ரூபா 14,625 ஏக்கர் வரியை அறவிடுவதற்கு 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 134(3) ஆம் பிரிவில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**2.2.6 இயந்திர சாதன வாடகை**

சபைக்குரிய பெகோ இயந்திரம், மோட்டார் கிறேடர், லொறி பவுசர் மற்றும் கலீ பவுசர் என்பவற்றை வாடகைக்கு வழங்குவதன் மூலம் 2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,233,919 அறவிடப்பட வேண்டியிருந்தது.

**2.3 போதிய அதிகாரத் துணையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 132(ஏ) பிரிவின் பிரகாரம் அமைச்சரின் அங்கீகாரத்தைப் பெறாது 2011 ஏப்ரல் 01 அன்று நடைபெற்ற புதிய கூட்டத்தொடர் வைபவத்திற்கு ரூபா 70,600 செலவிடப்பட்டிருந்தது.

**2.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

தென் மாகாண சபையின் சான்றுறுதிப்படுத்தும் பொறியியலாளரால் மதிப்பிடப்பட்ட 270 – 2136 ஆம் இலக்க பெகோ இயந்திரத்தின் விற்பனைப் பெறுமதி ரூபா 2,900,000 ஆகும். சபை அந்த இயந்திரத்தை ரூபா 1,200,000 க்கு வெளிநபர் ஒருவருக்கு 2011 ஜனவரி 10 ஆந் திகதியன்று விற்பனை செய்திருந்தது. சபையின் நிலையான சொத்துக்களை திறந்த கூறு விலைகளைக் கோருவதன் மூலம் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமாயினும், 2010 செப்டெம்பர் 29 ஆந் திகதிய சபைக் கூட்ட அறிக்கை 04(iv) பிரகாரம், சொத்தின் விற்பனை விலையை கேள்விச் சபை தீர்மானிப்பதற்கு அதிகாரமளித்து விற்பனை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 2.5 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

**பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.**

(அ) புதிய பஸ் தரிப்பிடம், கடைகள், அலுவலகங்கள் கொண்ட பல்கூட்டுத்தொகுதிச் செயற்திட்டத்தை அமுலாக்க ரூபா 495 இலட்சம் மதிப்பிடப்பட்டிருந்தது. அதில் ரூபா 243 இலட்சத்தை கடைகளுக்காக ஒரே தடவையில் பெறப்படும் தொகையின் மூலம் தீர்த்து வைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டது. 2012 ஒக்டோபர் 31 வரை சபை ஒரே தடவையில் பெறப்படும் தொகையை அறவிடாது போனமையால் அத் தொகை சபையின் நிதியிலிருந்து செலவிடப்பட்டது. இதனால் செயற்திட்டச் செலவை எதிர்பார்த்த தொகையிலிருந்து தீர்த்து வைக்க முடியாது போயிற்று.

(ஆ) 2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ஓராண்டைக் கடந்துவிட்ட பெற வேண்டிய கணக்குகளது கூட்டுத்தொகை ரூபா 19,981,244 ஆகும்.

(இ) 2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ஓராண்டைக் கடந்து விட்ட கொடுப்பனவு செய்ய வேண்டிய பொது வைப்புக் கணக்கு மீதி ரூபா 2,004,444 ஆகும்.

## 2.6 உள்ளகக் கணக்காய்வு

நிறுவனத்தில் போதிய உள்ளகக் கணக்காய்வு இடம்பெறவில்லை

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கீழே காணப்படும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருவாய் நிர்வாகம்
(இ) சொத்து முகாமைத்துவம்